# பத்திரிக்கை செய்தி

## இலகுவான பணி வழங்க ரூ.2,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய துப்புரவு ஆய்வாளர் கைது

புகார்தாரர் திரு.பாஸ்கர், தூய்மை பணியாளர், பெருநகர சென்னை மாநகராட்சி, எண்.1/365, திருவள்ளுவர் நகர், கொருக்குபேட்டை, சென்னையில் வசித்து வருகிறார். புகார்தாரர் பெருநகர சென்னை மாநகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வருகின்றார். கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு மூளையில் கட்டி காரணமாக மருத்துவ விடுப்பு பெற்று மருத்துவ விடுப்பில் இருந்துள்ளார். கடந்த 01.09.2024 அன்று பணிக்கு அறிக்கை செய்து திரு.திருமல்ராவ், துப்புரவு ஆய்வாளர், அலகு 14, வார்டு 59, மண்டலம் 5, பெரு நகர சென்னை மாநகராட்சி அவர்களிடம் தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் இலகுவான பணிகளை ஒதுக்குமாறு கோரிக்கை வைத்துள்ளார். திரு.திருமல்ராவ், துப்புரவு ஆய்வாளர், புகார்தாரருக்கு இலகுவான பணிகளை ஒதுக்க வேண்டுமெனில் தனக்கு மாதா மாதம் ரூ.6,000/-லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார், மேலும் தற்போது முதல் தவணையாக ரூ.2,000/- கொடுக்குமாறு வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு சென்னை நகர பிரிவு 5ல் அளித்த புகாரின் பேரில் இன்று 25.09.2024, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.திருமல்ராவ், துப்புரவு ஆய்வாளர், அவர்கள் லஞ்ச பணம் ரூ.2,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.